பணிகளும் நடைபெறாத சூழ்நிலை இருக்கின்றது. இதற்குக் காரணம், JCB போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றபோது, உயரழுத்த மின் கம்பிகளில் படுகின்ற அளவுக்கு அவை தாழ்வான உயரத்தில் இருக்கின்ற காரணத்தால் சுமார் 400 மீட்டர் நீளமுள்ள ஒரு சாலை போடப்படாமல் அப்படியே இருக்கிறது. இதன் காரணமாக, பொதுமக்கள் மிகவும் அச்சத்தோடு அந்தப் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மேலே செல்கின்ற உயரழுத்த மின் கம்பிகளை பூமிக்கடியில் பதிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயரழுத்த மின் கம்பிகள் தாழ்வாகச் செல்கின்றன என்று சொல்கின்றார். JCB போன்ற இயந்திரங்களை வைத்து பணிகளைச் செய்கின்றபோது அது ஆபத்தாக இருக்கின்றது என்று சொல்கிறார். அப்படியிருந்தால் அதை ஆய்வு செய்து, அதனை உடனடியாக மாற்றிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

124—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***696—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு தனிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பரப்பலாறு குடிநீர்த் திட்டம் மற்றும் வேடசந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 30.50 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. கடும் வறட்சி காரணமாக தற்பொழுது வேடச்சந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் பெறப்படும் 2.5 இலட்சம் லிட்டர் குடிநீர், லாரிகள்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நடைபெற்றுவரும் நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நாள்தோறும் 18 மணிநேரம் நீரேற்றம் செய்து குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம் நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கூடுதலாக 3 மணிநேரம் நீரேற்றம் செய்து ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு 30 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் நகராட்சியானது வளர்ந்துவரும் நகராட்சியாகும். அங்கே 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். தமிழ்நாட்டிலே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் ஒட்டன்சத்திரம் நகராட்சியின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. அங்கு தினந்தோறும் வியாபாரிகளும், விவசாயிகளும், வேலைக்குச் செல்கின்ற தொழிலாளர்களும் என சுமார் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பேர் வருகிறார்கள்.

2017 ஜூலை 4]

அதுமட்டுமல்லாமல், பங்குனி உத்திரம், தைப் பூசம் போன்ற திருவிழாக் காலங்களிலே பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு பல இலட்சக்கணக்கான பாதசாரி பக்தர்கள் ஒட்டன்சத்திரம் நகரின் வழியாகத்தான் செல்கிறார்கள். எனவே, குடிநீர் தேவை அதிகரித்துக்கொண்டே போகிறது. நகராட்சியைப் பொறுத்தவரையிலே, ஒவ்வொரு நபருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 90 லிட்டர் வழங்க வேண்டும் என்பது அரசின் கொள்கை. இதுவரை பரப்பலாறு அணையிலிருந்துதான் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு தண்ணீர் வந்துகொண்டிருந்தது. 142 ஆண்டு காலம் இல்லாத வறட்சியின் காரணமாக கடந்த 6 மாதங்களாக பரப்பலாறு அணை சுத்தமாக வறண்டுவிட்டது. அணையின் உயரம் 90 அடி. தினந்தோறும் 5 கன அடி தண்ணீர்தான் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு வழங்கிக் கொண்டிருந்தார்கள். பரப்பலாறு அணையின் மூலமாக வருகின்ற 22 இலட்சம் லிட்டர் தண்ணீரிலே 7 இலட்சம் லிட்டர் தண்ணீரை வழியோரத்தில் இருக்கின்ற விருப்பாச்சி மற்றும் சாமியார்புதூர் கிராம மக்கள் எடுத்துக்கொள்கிறார்கள். ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு 15 இலட்சம் லிட்டர் தண்ணீர்தான் வருகிறது. 2008 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் வேடச்சந்தூர்–காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், இப்போது அந்தத் தண்ணீர் முழுமையாக இங்கு வந்து சேரவில்லை. கடும் வறட்சி காரணமாக தண்ணீர் வரவில்லை. மக்கள் தண்ணீருக்காக மிகவும் சிரமப்படுகிறார்கள். விலைக்கு வாங்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2.5 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். 50 நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் மக்களுக்கு வழங்கப்படுகிறது. எனவே, மக்கள் படுகின்ற துன்பங்கள், துயரங்கள் ஏராளம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்றைக்கு நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு தண்ணீர் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். 636 கோடி ரூபாயில் நடக்கின்ற அந்தத் திட்டத்திலே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரைமாதிரி பேசிக்கொண்டிருக்கிறீர்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 636 கோடி ரூபாயில் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு 18 மணிநேரத்தில் 3 மணிநேரம் அதிகப்படுத்தி தண்ணீர் தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகப் பேசினால் எல்லோருக்கும் வாய்ப்புத் தரலாம்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைப் பொறுத்தவரையிலே ஏற்கெனவே வேடசந்தூர்–காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 3* phase *ஆக 108 கிராமங்கள், 93 கிராமங்கள், 101 கிராமங்கள் உள்ளன; ஆனால், தண்ணீர் வந்து சேரவில்லை. நான் கேட்டுக்கொள்வது, 108 கோடி ரூபாயில் செயல்படுத்துகின்ற நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கும், ஒட்டன்சத்திரத்தில் இருக்கின்ற 34 ஊராட்சிகளுக்கும் மட்டும் நீங்கள் குடிநீர் வழங்கினால் போதும். தொப்பம்பட்டி ஒன்றியத்திற்குக் குடிநீரைக் கொண்டு செல்ல ஏற்கெனவே மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. ஆனால் இப்போது பழனி ஒன்றியத்திலுள்ள 255 குடியிருப்புகளுக்காக 20 கிலோ மீட்டர் தூரம் அத்திட்டத்தை நீட்டித்துக் கொண்டு செல்கிறீர்கள். நான், நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஒட்டன்சத்திரத்தோடு நிறுத்திக்கொள்ளச் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை முடியுங்கள். நீங்கள் மானியத்தில் பேசுவதுபோல் பேசுகிறீர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொப்பம்பட்டி ஒன்றியத்திற்கும், பழனி ஒன்றியத்திற்கும் சுமார் 20 கிலோமீட்டர் தூரத்திலுள்ள திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் கொண்டுவந்துவிட்டால், தொப்பம்பட்டி ஒன்றியத்தில் தண்ணீர்ப் பிரச்சினையே வராது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொல்கின்ற கோரிக்கையை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

2017 ஜூலை 4]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் நகராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 30,274 ஆகும். இந்த நகராட்சியின் குடிநீர்த் தேவை 27.20 இலட்சம் லிட்டர். பரப்பலாறு குடிநீர்த் திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு 15.50 இலட்சம் லிட்டர் குடிநீரும், வேடசந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 15 இலட்சம் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வந்தது. 142 ஆண்டு காலமாக இல்லாத வறட்சி இப்போது இருப்பதாக மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களே பேசும்போது சொன்னார்கள். லாரிகள்மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும்; அனைத்து இடங்களிலும் கடுமையான வறட்சி இருப்பதால் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தண்ணீர் வழங்குகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1,077 கோடி ரூபாயை குடிநீருக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே* bore, *பைப் லைன் எல்லாம் போட்டுக் கொடுத்திருக்கிறோம். ஆனாலும், அந்தப் பகுதி மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு கடுமையான சூழ்நிலை அங்கு இருக்கிறது என்பதை அறிவோம்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற ஓர் அற்புதமான திட்டத்தை அறிவித்து, அந்தத் திட்டத்திற்கு 636 கோடி ரூபாய் நிதியொதுக்கி, tender *விடப்பட்டு, இன்றைக்குப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பரப்பலாறு குடிநீர்த் திட்டத்தின்மூலம், தற்போது நடைபெற்றுவரும் நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், நாள்தோறும் 18 மணி நேரம் குடிநீர் விநியோகம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த* scheme *முடியும்போது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான நகராட்சியில் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டுவிடும்.*

இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமூர்த்தி அணையிலிருந்து 12 மில்லியன் லிட்டர் குடிநீர் கேட்டார்கள். அதேபோல, பழனி சட்டமன்ற உறுப்பினரும் இதுகுறித்துக் கேட்டார்கள். இந்தத் துறையின் அதிகாரிகளும், நானும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு

இதனைக் கொண்டு சென்றோம். அவரும் உடனடியாக பொதுப் பணித் துறையின் அனுமதியைப் பெற வேண்டும் என்றார். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பிருந்தால், உடனடியாக ஆய்வு செய்து நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்தால் சரியாக இருக்கும் என்று அதிகாரிகள் ஆய்வு செய்யும்போது விளக்கியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் கேட்டிருப்பதால், அந்தத் திட்டத்தைக் கண்டிப்பாக நிறைவேற்றும் வகையில், ஆவன செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு சென்று, அங்குள்ள அதிகாரிகளையெல்லாம் convince செய்து, கண்டிப்பாக அந்தத் திட்டம் வருவதற்கு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு நடவடிக்கை எடுக்கும்.

அதேபோல, மதுரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த குடிநீர்த் திட்டத்தைப் பற்றி நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். திரு. எஸ்.ஆர். இராஜா மற்றும் நாங்களெல்லாம் 2006–ல் M.L.A. ஆக இருந்தோம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது குற்றச்சாட்டு எதுவும் சொல்லவில்லை, நன்றிதான் சொன்னார். பத்து நாட்களாக நாங்கள் அங்கு போய், அந்த விழாவிற்கான arrangement செய்தபோது, அங்கிருக்கக்கூடிய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், முன்னாள் மேயர் மற்றும் மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இராஜன் செல்லப்பா அவர்களும், ஒரு கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைத்தார்கள். இதற்கு முன்னர் அந்தக் கோரிக்கையை Association மூலம் பொதுமக்கள் வைத்தார்கள். அந்தக் கோரிக்கையில் பெரியார் அணையிலிருந்து தண்ணீர் வேண்டுமென்று கேட்டார்கள். வைகை அணையிலிருந்து தண்ணீர் எடுக்க AMRUT மூலம் tender விடப்பட்டது. அங்குள்ள எல்லா பகுதிகளிலும் கடுமையான வறட்சி. வறட்சியால் மதுரைதான் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. பெரியாறு அணையிலிருந்து தண்ணீர் எடுத்தால் மதுரை மாநகருக்கு 60 வருடங்களுக்குத் தண்ணீர்ப் பிரச்சினை இருக்காது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் எடுத்து, அந்தத் திட்டத்தை

மதுரையில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குத்தான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நன்றி சொன்னார்கள். வேறு எதுவும் இல்லை. அது முக்கியமான திட்டம், pipeline மூலம் தண்ணீர் கொண்டுவந்தால், 60 ஆண்டு காலத்திற்கு குடிநீர்ப் பிரச்சினை இருக்காது. அந்தத் திட்டத்தில் உள்ள தண்ணீர் வேறு இடத்திற்குச் செல்கிறது என்று எதிர்க்கட்சிக் கொறடாகூட சொன்னார்கள். மதுரை மக்களுக்கு pipeline மூலம் தண்ணீர் கொண்டுவரும் ஓர் அற்புதமான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்திற்குத்தான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நன்றி சொன்னார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. அர. சக்கரபாணி, மதுரைக்குத் தண்ணீர் கொடுத்திருப்பதால் நீங்களும் நன்றி சொல்லி, சுருக்கமாக உரையை முடியுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலே, கடந்த 20–4–2017 அன்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே, குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அதில் சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டோம். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் வந்தபோதுகூட, இந்தக் கருத்தை நாங்கள் வலியுறுத்தியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குடிநீர்ப் பிரச்சினை குறித்து ஆய்வு செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு 306 ஊராட்சிகள், அதேபோல 14 ஊராட்சி ஒன்றியங்கள், 23 பேரூராட்சிகள் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் கேள்வியை முடியுங்கள். சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: கடுமையான வறட்சி அங்கு நிலவுவதால், ஊருக்கே செல்ல முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கை வரும்போது நீங்கள் விவரமாகப் பேசுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: 3 நகராட்சிகள், 1 மாநகராட்சி இருப்பது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. எனவே, கூடுதலான நிதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒதுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்த பிறகு, ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகள், அதேபோல செயலாக்கத்தில் இருக்கின்ற பணிகள், இன்னும் உள்ள பணிகளை ஆய்விற்கு எடுத்துக்கொண்டால், அந்தப் பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். இதற்கான ஓர் ஆய்வுக் கூட்டத்தை திண்டுக்கல் மாவட்டத்திலே நீங்கள் நடத்தி, திண்டுக்கல் மாவட்ட மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் ஊருக்கே போக முடியவில்லை என்று சொன்னார்கள். நேற்றுகூட, ஒரு பொது நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு, காலதாமதமாக அவைக்கு வந்தார் என்பதை நான் அவையில் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் கேட்ட கோரிக்கை சம்பந்தமாக, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அந்த ஆய்வுக் கூட்டத்தை நடத்தி

2017 ஜூலை 4]

என்னிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் அங்கு இருக்கின்ற சூழ்நிலைகளையெல்லாம் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். 142 ஆண்டுகளில் இல்லாத வறட்சி, இது இயற்கையாகவே வந்த வறட்சி. 62 சதவிகிதம் மழைப் பொழிவுதான் இருந்தது. இன்றைக்கு மதுரையில் சில இடங்களில் மழை பெய்தது, அதனால் குடிநீர் விநியோகத்தை raise செய்துவிட்டோம். எவ்வளவு MLD குடிநீர் வேண்டுமோ அந்த அளவுக்கு raise செய்துவிட்டோம். இந்த வறட்சி இயற்கையாகவே வந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, தானே புயலானாலும் சரி, வறட்சி வந்தாலும் சரி, பெரு வெள்ளம் வந்தாலும் சரி, உடனடியாக நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு தனிக் கவனம் செலுத்தி பத்து ஆய்வுக் கூட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். எங்களையும் அழைத்து தொடர்ந்து ஆய்வுக் கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. திண்டுக்கல் மற்றும் மதுரையில் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை நிலவி வருகின்றது. தமிழ்நாடு முழுவதும் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. ஆனால், அவ்விரு மாவட்டங்களிலும் குடிநீர்ப் பிரச்சினை கூடுதலாக இருப்பதனால், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, அதற்காக ரூ.1,077.10 கோடி நிதியை ஒதுக்கியிருக்கிறோம். அதேபோல, general fund–ல் இருக்கிற நிதியையும் முழுமையாகக் குடிநீருக்குப் பயன்படுத்தச் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உத்தரவிட்டிருக்கின்றார்கள். பைப்லைன் போடுவது, போர்வெல் போடுவது ஆகியவை எந்த ஊராட்சியில் வேண்டுமென்றாலும் உடனே குறிப்பிடும்பட்சத்தில், அவை உடனடியாகச் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியினுடைய அமைச்சர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து, எம்.எல்.ஏ.–க்களை அழைத்துப் பேசி குடிநீர்ப் பிரச்சினைக்காக ஒரு தீர்வு செய்திருக்கின்றார். அது நல்ல முயற்சி. அதேபோல் எங்களுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் திரு. கே.சி. வீரமணி

அவர்கள் குடிநீர்ப் பிரச்சினைக்காக எங்களையெல்லாம் அழைத்துப் பேசுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

125—

சட்ட ஆட்சிமொழி ஆணையம்

***3233—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்ட ஆட்சிமொழி ஆணையத்தை மீண்டும் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையத்தை மீண்டும் அமைக்கும் கருத்துரு எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டங்கள், மத்தியச் சட்டங்கள், அதுபோல அவசரச் சட்டங்கள், அறிவிக்கைகள், விதிகள் இவையெல்லாம் இன்றைக்கு நிறைய இருந்தாலும் அனைத்து மக்களிடமும் இந்தச் சட்ட அறிவு, சட்ட விழிப்புணர்வு ஏற்பட்டு இருக்கிறதா என்று சொன்னால், எதிர்பார்த்த அளவிற்கு அடித்தட்டு மக்களை இந்தச் சட்டங்கள் போய்ச் சேரவில்லை. இதற்காகத்தான் 1961–ல்